Judicial Magistrate Court No.I, Chengalpattu.
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I, CHENGALPATTU. |
| Calendar Case No. | : CC No.88 / 2017 |
| Deposition of witness for | : Pw 5 |
| Name | : முத்து |
| Father`s Name / Husband's Name | : குப்பன் |
| Village | : |
| Taluk | : |
| Religion | : |
| Age | : /2018 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.11.2018.

**முதல் விசாரணை-** நான் தற்போது சென்னை எழிலகம், வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் துணை ஆணையர் திட்டம், மாவட்ட வருவாய் அலுவலராக பணிபுரிந்து 31.05.2018 அன்று பணிஓய்வு பெற்று விட்டேன். கடந்த 2000ம் ஆண்டு மண்டல துணை வட்டாட்சியர், தாம்பரம் ஆக பணியில் இருந்த போது என்னுடன் இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட சாமிநாதன் என்பவர் தலைமையிடத்து பணி வட்டாட்சியராகவும் லோகநாதன் என்பவர் சிட்லபாக்கம் கிராம நிர்வாக அலுவலராகவும் பணிபுரிந்து வந்தார். ஆலந்தூர் மண்டல துணை வட்டாட்சியராக திரு.வரதராஜன் என்பவர் பணிபுரிந்து வந்தார். தாம்பரம் சரகம் சர்வேயராக திரு.எட்வின் கோவில்ராஜ் என்பவரும் தலைமை நில அலுவலராக திரு.கனகராஜ் மற்றும் மதனகோபால் என்பவரும் பணிபுரிந்தனர். காஞ்சிபுரம் சிபிசிஐடி போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக அதசாஆ 9 ஆன பட்டாவில் கையெழுத்து யாருடையது என கேட்டனர். அதற்கு அந்த கையெழுத்திட்ட நபர்கள் தலைமையிடத்து வட்டாட்சியர், தாம்பரம் அவர்கள் கையெழுத்தாக இருக்கலாம், ஆனால் அறுதியிட்டு கூற இயலாது. இன்று நீதிமன்றத்தில் என் முன்பாக காட்டப்படும் சிட்டா உண்மை நகலில் உள்ள கையெழுத்து கிராம நிர்வாக அலுவலர் என்று போடப்பட்டுள்ளது. அவருடைய கையெழுத்து என்று எனக்கு சரியாக தெரியாது. மேற்கண்ட 1410ம் பசலியில் உள்ள சிட்டாவின் உண்மை நகல் ஆனது அதசாஆ 10 ஆகும். அந்த ஆவணம் நகல் என்பதால் எதிரி தரப்பு வழக்கிறஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. இன்று நீதிமன்றத்தில் என் முன்பாக காட்டப்படும் வட்டாட்சியர் அவர்களின் உத்தரவின் உள்ள கையெழுத்தும் அதசாஆ 9ல் உள்ள கையெழுத்தும் ஒன்று தான். மேற்கண்ட

வட்டாட்சியர் அவர்களின் உத்தரவானது அதசாஆ 11 ஆகும். இன்று நீதிமன்றத்தில் என் முன்பாக காட்டப்படும் 1409 ஆம் பசலியில் உள்ள சிட்லபாக்கம் கிராமத்தின் சிட்டா நகலில் உள்ள கையொப்பமும் 1410ம் பசலியில் உள்ள சிட்லபாக்கம் கிராமத்திற்கு வழங்கப்பட்ட சிட்டா நகலிலான அதசாஆ 10ல் உள்ள கையொப்பமும் ஒன்று தான். 1409 பசலியில் உள்ள சிட்டா உண்மை நகல் அதசாஆ 12 ஆகும். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. எங்கள் ஆளுகைக்குட்பட்ட தாம்பரம் மண்டலத்தில் தாம்பரம் சரகம், பள்ளிக்கரணை சரகம் இரண்டும் அடங்கும். ஆலந்தூர் சரகம் மட்டும் ஆலந்தூர் மண்டலத்திற்குட்பட்டது. அந்த தாம்பரம் சரகத்தில் சிட்லபாக்கம் கிராமம் வருகிறது. எதிரிகள் சாமிநாதன் மற்றும் லோகநாதன் இந்த நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளனர். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-** எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/(xxxx)

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

ஓம்/=XXXXXXXXXXX
நீதித்துறை நடுவர் எண்.1,
செங்கல்பட்டு.